17.03.2026 OS.No.51/2020 DW4 Name :.மனோகரன்

குறுக்கு விசாரணை

1. பிரதிவாதி சேகர் என்னுடைய ஊர்காரர். பிரதிவாதி சேகரின் வழக்கறிஞர் எனக்கு நெருக்கமானவர் என்றால் அவ்வாறு இல்லை. சேகர் சொல்லிதான் சாட்சியம் கூற வந்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் எந்த கதவு இலக்கத்தில் நான் வசிப்பதாக கூறியுள்ளேன் என்றால் தற்போது நியாபகம் இல்லை அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள 23/39 என்ற கதவு எண்ணில் நான் வசிக்கவில்லை என்றும் அது என்னுடைய பக்கத்து வீட்டு கதவு எண் என்றும் சொன்னால் சரியல்ல.
2. அதனால் தான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் பிரதிவாதிகள் சேகர், பாபு, தமிழ்செல்வி சாந்தி ஆகியோர்கள் உள்ளார்கள். ரவி வாதி ஆகும். வாதி, பிரதிவாதிகள் பற்றிய விவரம் தெரியாமல் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளுக்காக வக்காலத்து தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து விவரம் எனக்கு தெரியும். அ சொத்து நிலம் ஆகும். அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 92 செண்டு ஆகும். பி சொத்தில் சேகர் குடியிக்கிறார் என்றால் அவ்வாறு இல்லை.
3. சேகரின் சொத்தில் ரவி குடியிருக்கிறார். பி சொத்தில் ரவி கடை கட்டி வியாபாரம் செய்கிறார் என்றால் இல்லை. சேகருக்காக பொய் சாட்சியம்

கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி பிரதிவாதியை பற்றி எனக்கு அனைத்து விவரங்களும் தெரியும். சேகர் பல லட்சம் செலவு செய்தது குறித்து குறிப்பாக எவ்வளவு என்று சொல்ல முடியாது. அது தொடர்பாக வாக்குமூலத்தில் கூறவில்லை. சேகர் தட்சணாமூர்த்தியிடம் ரூ.5 லட்சம் கடன் பெற்று வட்டி கட்டி வருகிறார். அது தொடர்பான விவரத்தை வாக்குமூலத்தில் கூறவில்லை. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு விவரம் எனக்கு தெரியும்.

4. நிலத்திலிருந்து எந்த வருமானமும் வரவில்லை. சேகருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சேகர் வாங்கிய சொத்தின் ஆவணத்தை பார்த்துள்ளேன். 1992ல் அது வாங்கியுள்ளது. அப்போது அது காலியிடமாகும். பின்னர் எல்ஐசி கடன் வாங்கி வீடு கட்டியுள்ளார். அதை வாக்குமூலத்தில் கூறவில்லை. பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 17/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.17 14:55:28 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.